ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2022.05.12 |

**இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தலைத் இலங்கை மத்திய வங்கி தொடங்கிவைத்தது**

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தலை 2022 மே 06 அன்று ஜோன் எக்ஸ்டர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் தொடங்கிவைத்தது. இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தல் என்பது சுற்றாடல் ரீதியாக நிலைபெறத்தக்க பொருளாதார நடவடிக்கைகளை வரைவிலக்கணம்செய்து வகைப்படுத்துவதுடன் 2019இல் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டலில் எடுத்துரைக்கப்பட்ட முக்கிய செயற்பாட்டு விடயமொன்றாகக் காணப்படுகின்ற வகைப்படுத்தல் முறைமையொன்றாகும். இவ்வகைப்படுத்தலானது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கு இசைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளை, உள்நாட்டு பின்னணிக்கு ஏற்றவிதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகள் இரண்டினூடாகவும் பசுமை நடவடிக்கைகளுக்கு குறைந்த செலவில் நிதியளித்தலைத் திரட்டுவதற்கு இது நிதியியல் சந்தை பங்கேற்பாளர்களை இயலச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைப் பசுமை நிதி வகைப்படுத்தலானது, நிதியியல் உற்பத்திகளை (வங்கிக் கடன்வழங்கல், படுகடன் சாதனங்கள், சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் மற்றும் முதலீட்டு நிதியங்கள் போன்ற) வழங்குகின்ற அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை பங்கேற்பாளர்களுக்கும் பாரிய கூட்டுத்தாபனங்கள், அதேபோன்று தேசிய மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகிய அனைத்திற்கும் ஏற்புடையதாகவிருக்கும். கைத்தொழில்சார் திட்டமிடல் அதிகாரிகளின் மூலமான தொடர்புபடுத்தலாகவும் இது பயன்படுத்தப்படக்கூடியதாக இருக்குமென்பதுடன் வனம் மற்றும் மரம் அறுத்தல், வேளாண்மை, தயாரித்தல், மின்சக்திப் பிறப்பாக்கம், ஊடுகடத்தல் மற்றும் விநியோகம், எரிவாயு, ஆவி மற்றும் வாயுச்சீராக்கி வழங்கல், நீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் கழிவு முகாமைத்துவம், நிர்மாணம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம், நிதியியல் சேவைகள் மற்றும் சுற்றுலா மற்றும் ஓய்வு போன்ற பலவகையான பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்குகின்ற பசுமைத்தொழில் துறைகளுக்கு ஆதரவளிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான அடிப்படையாகவும் இது அமையும்.

இலங்கைப் பசுமை நிதி வகைப்படுத்தலானது, பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டதுடன் அதன் செயன்முறையானது நிலைபெறத்தக்க வங்கித்தொழில் மற்றும் நிதி வலையமைப்பு மற்றும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபன பசுமைப் முறி தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் என்பனவூடாக வசதிப்படுத்தப்பட்டது. உள்நாட்டு நிபுணர்களின் உதவியுடன் அதாவது மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் முனைவர் துசித்த சுகதபால, களனிப் பல்கலைக்கழகத்தின் முனைவர். மதுரிகா நாணயக்கார ஆகியோரின் உதவியுடன் பன்னாட்டு தொழில்நுட்ப நிபுணர்களைக் கொண்ட குழாமொன்றும் மத்திய வங்கியின் அலுவலர்களும் வகைப்படுத்தலை உருவாக்குவதில் பங்களித்தனர். வகைப்படுத்தலை வரைதலானது பல்வேறு அரசாங்க அமைச்சுக்கள், நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் தொழில்துறை அமைப்புகள், ஏனைய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் தொழில்சார் பணி வழங்கும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக பல்துறை ஆர்வலர்களுடனான விரிவான ஆலோசனைச் செயன்முறையினை ஈடுபடுத்தியதாகக் காணப்பட்டது.

இலங்கை பசுமை நிதி வகைப்படுத்தலைத் தொடங்கிவைக்கும் நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் நாட்டிற்கான முகாமையாளர் திருமதி. லிசா கீஸ்ட்னர் மற்றும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்கள், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிபுணர்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பங்காளர் முகவராண்மைகளின் பிரதிநிதிகள், நிதியியல் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் மத்திய வங்கி அலுவலர்கள் சமூகமளித்தனர். தொடக்க நிகழ்வின் முக்கிய உரையினை ஆற்றிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, நாட்டின் நிதியியல் முறைமையினுள் குறிப்பாக நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார சவால்களையும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுத் தாக்கத்திலிருந்து மீட்சிபெறுகின்ற காலப்பகுதியினையும் கொண்ட பின்னணியில் நிலைபெறுதன்மையினை ஒருங்கிணைப்பதற்கான முழுமையான உபாயமொன்றினை ஊக்குவித்து விருத்திசெய்வதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டினார். இலங்கைப் பசுமை நிதி வகைப்படுத்தலானது, நிதியியல் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், கூட்டுநிறுவனங்கள் மற்றும் பசுமை முறி வழங்குநர்கள் போன்றோர் குறைவான காபன், காலநிலையின் தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் மூலவள வினைத்திறன்மிக்க பொருளாதாரம் என்பவற்றுக்கு மாறுதலடைவதை திசைப்படுத்துவதற்கு வழிகாட்டுகின்ற முக்கிய கருவியொன்றாக அமையும் என்ற விடயத்தையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

முக்கிய உரையினைத் தொடர்ந்து இலங்கை பசுமை நிதி வகைப்படுத்தல் பற்றிய பொதுநோக்கொன்றினையும் 'பசுமை நிதி வகைப்படுத்தலுடன் இலங்கையில் பசுமை நிதியினைத் துரிதப்படுத்தல்' மீதான மெய்நிகர் குழுக் கலந்துரையாடலையும் வழங்குவதற்கு கலப்பு அமர்வொன்று இடம்பெற்றது. வகைப்படுத்தல் மீதான அமர்விற்கு பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் வே யுவான் முனைவர் துசித்த சுகதபால அதேபோன்று வகைப்படுத்தல் விருத்திக்குப் பங்களித்த பன்னாட்டு நிபுணர்களான பொலு வேங் மற்றும் பிறிச்சட் புல்லோ ஆகியோர் பங்களிப்புக்களை வழங்கியிருந்தனர். பசுமை நிதியிடல் வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கு வகைப்படுத்தலானது எவ்வாறு நிதியியல் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கவல்லது என்பதனை மையப்படுத்தி மெய்நிகர் குழுக் கலந்துரையாடலானது பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் மற்றும் நிதி வலையமைப்பு, உலகளாவிய ஒருங்கிணைப்பாளர் ரொங் ஷாங் என்பவரினால் நெறிப்படுத்தப்பட்டது. சீன பசுமை நிதிக் குழுவின் தலைவரும் ஜி20 நிலைபெறத்தக்க நிதி ஆய்வுக் குழும இணைத் தலைவருமான முனைவர் மா ஜுன், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட தொழில்துறை விசேட நிபுணர் புஸ்கலா லக்ஷ்மி ரட்டான், காலநிலை முறி தொடக்க முயற்சியின் சீயன் கிட்னி மற்றும் நிலைபெறத்தக்க மூலதனச் சந்தை ஏபிஏசி மற்றும் பீஎன்பி பரிபாஸ் பிரதானி, சாலுனி குவாங் ஆகியோர் குழுக் கலந்துரையாடலுக்குப் பங்களித்தனர்.

பின்வரும் இணைப்பினைப் பயன்படுத்தி இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளலாம்:

https://www.cbsl.gov.lk/sl-green-finance-taxonomy





# Sri Lanka Green Finance Taxonomy

May 2022

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA